**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

**<u>O.S. NO. 54/2021</u>**

**வா.சா.1**

**திருமதி. விர்ஜினியம்மாள் ஃபெர்னான்டோ**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு தொடர் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( பிரதிவாதிகள் தரப்பில்)**

29-10-2020 அன்று நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் என் தாயாருக்கு உடல்நிலை சரியில்லை அவர் இறந்துவிட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும், முதல்விசாரணை சாட்சியத்தில் மட்டும்தான் மேற்படி சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சாதாரணமாக ஒரு நபர் சொத்தை கிரையம் பெறும் சமயத்தில் அதற்குண்டான செலவினங்களை கிரையம் பெறும் நபர்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றால் ஆமாம். செலவினங்களை குறைப்பதற்காகத்தான் பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் எனது நிர்பந்தத்தின்காரணமாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. 2 ஒப்பந்தங்களிலும் மீதி கிரையத்தொகையை 5 மாத காலத்தில் செலுத்தப்படவேண்டும் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஒப்பந்தங்களிலும் 5 மாத

காலத்திற்குள் பகுதியாக கிரையத்தொகை கொடுப்பதாகவும், அல்லது ஒவ்வொரு மாதமும் தவணையாக மீதி கிரையத்தொகை கொடுப்பதாகவும் குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் மேற்படி காலக்கெடுவுக்குள் மீதி தொகையை செலுத்த இயலவில்லை என்பதாலும், அவ்வாறு தொகையை என்னால் ஏற்பாடு செய்யாத காரணத்தினால்தான் அவ்வப்போது தவணைகளாக தொகையை செலுத்தினேன் என்றால் சரியல்ல. நான் அடிக்கடி பிரதிவாதிகளை சந்தித்து சொத்தை கிரையம் கொடுக்க சொல்லி கேட்டதை காண்பிக்க ஆவணம் எதுவுமில்லைஎன்றால் சரிதான். நான் அறிவிப்பில் கண்டுள்ள தேதியில் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆஜராகி காத்திருந்தேன் என்று காண்பிக்க எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரிதான். நான் வழக்கு சொத்தினை ஒப்பந்தப்படி கிரையம் பெறுவதற்கு தயாராகவும், விருப்பமாகவும் இல்லாத காரணத்தினால் தான் நான் ஒப்பந்தப்படி எனது கடமையினை நிறைவேற்றவில்லை என்றால் சரியல்ல. நான் ஒப்பந்தத்தை நிறைவேற்ற தயாராகவும், விருப்பமாகவும் இருந்தேன் என்று காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 2 கிரைய ஒப்பந்தங்களின்பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் எந்த கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழக்கில் பரிகாரம் கோருகிறேன் என்ற விபரத்தை குறிப்பாக சொல்லவில்லை என்பதால் நான் கேட்டுள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றும், பிரதிவாதிகளின் சொத்தை

அபகரிக்கவேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.